**எலஹர பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 11 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 11 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு எலஹர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டின் போது மூலதன வருமானங்கள் மற்றும் செலவுகளை கணக்கீடு செய்யும் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மடுதமன நீர்ச் செயற்திட்டத்திற்காக கடன் அடிப்படையில் பெற்றிருந்த ரூபா 56,351 தொகைக்கான உபகரணங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 5,307,819 இற்கான பலவின கடன்கொடுத்தோர், நிர்மாணவேலைக் கடன்கொடுத்தோர், பொது வழங்கல்கள் கடன்கொடுத்தோர், முற்பணங்கள் ஆகிய விடயங்கள் தொடர்பான மீதிகள் 1 முதல் 5 வருடங்கள் வரை இடைப்பட்ட காலம் முதல் தீர்க்கப்படாமல் முன்கொண்டு வரப்பட்டு காணப்படும் மீதிகள் என அவதானிக்கப்பட்டது.

#### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) 132(ஓ) ஆம் பிரிவு | அமைச்சரின் அங்கீகாரம் இன்றி, பிரதேச சபை மந்திரிமார்கள் பன்முகப்படுத்தப்பட்ட நிதியம் என ஒரு மந்திரிக்கு ரூபா 100,000 வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பல்வேறு தனிப்பட்ட சாரார்களுக்கு பண்டங்கள் வினியோகிப்பதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 1,345,926 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (ii) 150(1), 152(1) மற்றும் 153(1) ஆம் பிரிவுகள் | கைத்தொழில்கள், வர்த்தகங்கள், திறந்தொழில் மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் தொடர்பாக அட்டவணை தயாரிக்கப்பட்டு, ஆண்டின் மார்ச் 31 திகதி அல்லது அதற்கு முன்னர் சபையின் செயலாளருக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | |
| விதி 99 | செலவுகள் சான்றுபடுத்தப்படாத ரூபா 3,983,807 தொகை பெறுமதியான 22 உறுதிச் சீட்டுகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) சுற்றறிக்கைகளும் கடிதங்களும் | |
| உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 மே 08 ஆந் திகதிய என்சீபீ/எல்ஜீ/ஏசீ/4/1/2 கொண்ட கடிதம் | 2015 மே மாதம் முதல் தலைவரினால் பயன்படுத்தப்பட்ட வாகனத்திற்காக ஒரு மாதத்திற்கு உச்சமட்ட எரிபொருள் வரையறை 10 லீற்றர் வரையறுக்க வேண்டும் என அறிவுரை வழங்கியிருந்த போதிலும் செயலாளரினால் அங்கீகரித்த வரையறையை விஞ்சி அவ்வாகனத்திற்கு 2530 எரிபொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,178,968 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 437,239 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 721,839 தொகையில் ரூபா 253,848 தொகை 1-5 வருடங்கள் இடையேயும் ரூபா 365,232 தொகை 5 வருடங்களுக்கு மிகையாகவும் நிலுவையாகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடை வாடகை நிலுவை ரூபா 224,867 தொகையில் ரூபா 109,350 தொகை 1-3 வருடங்கள் இடைப்பட்ட காலம் முதல் நிலுவையாக காணப்பட்டதுடன் இந்த அனைத்துப் பணத்தினையும் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

2014 ஆகஸ்ட் 08 முதல் 2015 திசெம்பர் வரையான காலப்பகுதியில் வீதவரி விடயங்களுக்கு பொறுப்பாக விடய அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் வருமானம் சேகரிக்கும் வருமானப் பரிசோதகர்களினாலேயே வீதவரி பதிவேடு பேணப்பட்டிருந்தது.

### 3.2 செயற்திட்டங்கள் தாமதித்தல்

சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது அமுல்நடத்துவதற்காக ரூபா 60,000,000 பெறுமதியான 21 செயற்திட்டங்கள் அங்கீகரித்திருந்த போதிலும் அவற்றில் ஒரு செயற்திட்டமே அமுல்நடத்தப்பட்டிருந்தது. ரூபா 50,000,000 தொகை பெறுமதியான 20 செயற்திட்டங்கள் அமுல் நடத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபையினால் முறையான திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவச் செயற்பாடு ஒன்று செயற்படுத்தியிருக்கவில்லை. அப் பிரதேசத்தில் சேகரமாகும் குப்பைகளை பாதுகாக்கப்பட்ட காட்டுப்பகுதிகளில், நீர் தாங்கு பகுதிகளில் பாதுகாப்பற்ற முறையில் குவிக்கப்படுகின்றன என அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக் கணக்காய்வு

வட மத்திய உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 மார்ச் 18 ஆந் திகதிய இலக்கம் 04/2015 கொண்ட சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் நேரடியாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் சபைக்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுதல்

மீளாய்வாண்டின் போது சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஒன்றும் நடத்தியிருக்கவில்லை.

### 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

(i) சபைக்குச் சொந்தமான கணனி உபகரணங்கள், அரிசி மா தயாரிக்கும் நிலைய உபகரணத் தொகுதி மற்றும் 53-5057 இலக்க கப் வண்டி என்பன 2-5 வருடங்கள்

வரையான காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) ரூபா 4,937,955 தொகை செலவில் தியபெதும தெஹிவத்த 16 கடைகளைக் கொண்ட கட்டிடம் மற்றும் காணி ரூபா 909,900 தொகை பெறுமதியான பகமூன பழைய நீர்த்தொட்டி மற்றும் அருகிலுள்ள காணி என்பன விளைவற்றுக் காணப்பட்டது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) அகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்